**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-09022024-8365

Volume: 9

Issue: 2

Month: Octobar

Year: 2024

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 08.07.2024

Accepted: 24.09.2024

Published: 01.10.2024

Citation:
Vaman, N. "The Revival of Saivism in Batticaloa during the Period of British Rule." *Shanlax International Journal of Tamil Research*, vol. 9, no. 2, 2024, pp. 33–44.

DOI:
https://doi.org/10.34293/tamil.v9i2.8365

*Corresponding Author:
vamannagaiah@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# The Revival of Saivism in Batticaloa during the Period of British Rule

**N. Vaman**
*Head & Senior Lecturer*
*Department of Hindu Civilization*
*Eastern University, Sri Lanka*
*https://orcid.org/0000-0001-7787-7837*

**Abstract**
*Batticaloa is one of the areas where Hindu culture is established in Sri Lanka. Traditional Saivism in Batticaloa saw various changes and developments during the British rule. On the one hand, the revival in traditional Hinduism took place at the village level. On the other hand, an educated middle class emerged as a result of upper country education and other national connections. Agama worship gradually began to develop. During this period, the educated youths and scholars jointly created Saiva schools in every village of Batticaloa. Religious institutions took many forms and worked for the Saiva revival. Many scholars and religious sages appeared and gave Saivaism sermons and discourses and also wrote and published many books. Saiva Temples took many forms and renovations also took place. This study reveals that such activities are the basis for the Saiva revival in Batticaloa.*
***Keywords:*** *Batticaloa, Saivism, Renaissance, Personalities, Hindu Organaisations*

**References**

1. Chithiraleka, M., (2004), Oral Traditions as Historical Sources, Eastern University, Sri Lanka.
2. Sivasubramaniam, V., (1993), Vibulananda Darshanam, Swami Vibulananda Centenary Congregation, Batticaloa.
3. Maheswaralingam, K., (2008), Batticaloa Life and Worship, Colombo Tamil Sangam, Colombo.
4. Ramakrishna Mission Student House 'Coral Festival' Special Issue, 2001, Ramakrishna Mission, Batticaloa.
5. Periyathampipillai, A., (1982), Ullathum Nallathum, Bulavarmani Periyathampipillai Memorial Centre, Batticaloa.
6. Mani, P. S., (1997) The Ramakrishna Movement in Sri Lanka, Ramakrishna Mission, Colombo.
7. Manohari, C., (2007), Hindu Oli, All Ceylone Hindu Congress, Colombo.
8. Mounaguru, C. (Ed.), (2003) Hindu Culture in Batticaloa, Second World Hindu Nation, Batticaloa.
9. Bhakyamurthy, A., Interview, Retired Principal, Age-74, Thamaraikeni,
10. Kandiah, V. C., (2002), Mattakkalappu Tamilakam, Excel, France.
11. Arunachala Author, Ka., (1968), Arudbhathiradum Arumborudbakkalum, Batticaloa.
12. Waman, N., (2010), Sengadir, Batticaloa.
13. Kandiah, C., (1997), Saivite Temples of Batticaloa, Department of Hinduism and Cultural Affairs, Sri Lanka.

# பிரித்தானியராட்சிக் கால மட்டக்களப்பிற் சைவ மறுமலர்ச்சி

***கலாநிதி நா. வாமன்***
தலைவர், சிரேஷ்ட விரிவுரையாளர்
இந்துநாகரிகத் துறை
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

***ஆய்வுச் சுருக்கம்***
*இலங்கையில் இந்துப் பண்பாடு நிலைபெற்றுள்ள பிரதேசங்களில் மட்டக்களப்பும் ஒன்றாகும். மட்டக்களப்பில் மரபு வழியாக நிலவி வந்த சைவசமயமானது பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் பல்வேறு மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் கண்டது. ஒருபுறம் மரபு வழியான இந்து சமயத்தில் மீளுருவாக்கம் கிராமிய மட்டத்தில் ஏற்பட்டது. மறுபுறம் மேல்நாட்டுக் கல்வியின் பயனாகவும் பிற தேசத் தொடர்புகளின் காரணமாகவும் படித்த மத்தியதர வர்க்கத்தினரின் தோற்றம் உருவானது. ஆகம வழிபாட்டு முறை படிப்படியாக வளர்ச்சியடையத் தொடங்கியது. இக்காலப்பகுதியிற் படித்த இளைஞர்களும் சான்றோர்களும் இணைந்து சைவப் பாடசாலைகளை மட்டக்களப்புக் கிராமங்கள்தோறும் உருவாக்கினர். சமய நிறுவனங்கள் பல தோற்றம் பெற்று சைவ மறுமலர்ச்சிக்காக உழைத்தன. அறிஞர்களும், சமய ஞானிகளும் தோன்றி சைவசமய பிரசங்கங்கள், சொற்பொழிவுகளை நிகழ்த்தியதோடு நூல்கள் பலவற்றையும் எழுதி வெளியிட்டனர். சைவாலயங்கள் பல தோற்றம் பெற்றதுடன் புனருத்தாரண வேலைகளும் இடம்பெற்றன. இத்தகைய செயற்பாடுகள் மட்டக்களப்பில் சைவ மறுமலர்ச்சி ஏற்படுவதற்கு அடிப்படையாக அமைந்தமை இவ்ஆய்வில் வெளிப்படுத்தப்படுகின்றது.*
***திறவுச் சொற்கள்:*** *மட்டக்களப்பு, சைவசமயம், மறுமலர்ச்சி, தனிமனித ஆளுமைகள், சமய நிறுவனங்கள்.*

## அறிமுகம்

இலங்கையிற் புராதன காலம் தொட்டே சைவ சமயம் வளர்ச்சிபெற்று வந்துள்ளதை வரலாறுகள் புலப்படுத்தி நிற்கின்றன. எனினும் சைவ சமயமானது ஐரோப்பியராட்சிக் காலப்பகுதியில் பல சவால்களுக்கு முகங்கொடுக்கவேண்டி ஏற்பட்டது. குறிப்பாக கி.பி.1505 இல் போர்த்துக்கேயரின் படையெடுப்பால் சீரற்ற நிலையை அடைந்தது. போர்த்துக்கேயர் தமது பண்பாட்டையும், மொழியையும், சமயத்தையும் சுதேசிய மக்களிடம் திணிப்பதற்காகப் பலவித அடக்குமுறைகளைக் கையாண்டு ஈழத்தின் கரையோரப் பகுதிகளில் இருந்த சைவக் கோயில்கள் அனைத்தையும் தரைமட்டமாக்கினர். இதனாலும், இவர்களின் பின் வந்த ஒல்லாந்தர் ஆட்சியின் ஆரம்பத்தில் பேணப்பட்ட அடக்குமுறைமைகளாலும் பொது வழிபாட்டு முறைமைகள் நடைபெறாது ஒழிந்தன. எனினும் ஒல்லாந்தர் பின்னர் பிறர் பண்பாட்டினைப் பகிர்ந்துகொள்ளும் பண்பினைக் கடைப்பிடித்தமையினால் 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சமய சட்டங்களை கண்டிப்பான முறையில் செயற்படுத்தாது நெகிழ விட்டனர்.

இவற்றுக்கும் மேலாக ஒல்லாந்தரிடமிருந்து ஆட்சியினைப் பறித்துக் கொண்ட பிரித்தானியர் ஈழத்து மக்களின் நன்மதிப்பைப் பெற்று தமதாட்சிக்கு வலுவூட்டும் எண்ணத்துடன் பௌத்த, சைவ, கத்தோலிக்க சமயத்தவர்களது பொது வழிபாடுகளுக்கு எதிராக ஒல்லாந்தர் விதித்த சட்டங்களை நீக்கிச் சமய சுவாதீனக் கொள்கைகளைக் கடைப்பிடித்தனர். பிரித்தானியராட்சியில் அரசாங்க சமயமென்று கிறிஸ்தவம் பிரகடனப்

படுத்தப்படவில்லை. எல்லோருக்கும் வழிபாட்டுச் சுதந்திரங்கள் கிடைத்தன. எனவே கரையோர மாகாணங்களில் பௌத்தர்களும், இந்துக்களும், இஸ்லாமியர்களும் தங்கள் சமய வழிபாடுகளைச் சுதந்திரமாக ஆற்றக்கூடிய நிலை ஏற்பட்டது. அந்நூற்றாண்டின் முற்பகுதியில் இலங்கைத் தமிழர்கள் வாழும் பகுதியிற் புராதன ஆலயங்கள் இருந்த பகுதியில் மீண்டும் கோயில்கள் கட்டப்பட்டன. புதிதாகவும் பல கோயில்கள் உருவாக்கப்பட்டன. இவ்வாறு நடைபெற்ற காலத்தில் பிரித்தானியாவிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் வந்த கிறிஸ்தவ மிஷனரிமார் கிறிஸ்தவ சமயத்தினை பரப்பும் முயற்சியில் பரந்தளவில் ஈடுபடலாயினர். அந்நாட்களில் அரசாங்க அதிகாரிகளாக இருந்த பலர் தீவிரமான கிறிஸ்தவர்களாக இருந்தனர். அவர்கள் தனிப்பட்ட முறையில் மிஷனரிமாருக்கு ஆதரவு புரிந்தனர். கல்வி சம்மந்தமான விடயங்களில் அரசாங்க அதிகாரிகள் கிறிஸ்தவ சமயம் சார்பாக பக்கச் சார்புடையோராயும் இருந்துள்ளனர். மிஷனரிமார் இளைஞர்களைச் சமயம் மாற்றிவிடலாம் என்று கருதிப் பல பாட சாலைகளை, கல்லூரிகளை அமைத்து அவற்றின் மூலமாக கிறிஸ்தவ சமயத்தின் வளர்ச்சியை முன்னிறுத்திச் சென்றனர். இக்காலத்தில் இலங்கையின் வட பகுதியில் ஆறுமுக நாவலர் தோன்றிச் சைவசமய புனருத்தாரணத்திற்கு அரும்பணி புரிந்தார். அவரது பணிகள் குறித்து பல நூல்களும் கட்டுரைகளும் வெளிவந்துள்ளன. இதே காலப்பகுதியில் மட்டக்களப்பிலும் சைவசமயத் தொடர்பாகப் பலர் முன்னின்று உழைத்ததன் பயனாகச் சைவ மறுமலர்ச்சி ஏற்பட்டது. எனினும் இவர்களது சைவசமய எழுச்சி தொடர்பான ஆய்வுகள் பெரும்பாலும் வெளிவரவில்லை. இக்காலத்தில் மட்டக் களப்பில் ஏற்பட்ட சைவ மறுமலர்ச்சி குறித்து ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பிரித்தானியராட்சிக் கால மட்டக்களப்பு தேசம்**

மட்டக்களப்பில் கி.பி. 1802 இல் கால்பதித்த பிரித்தானியர்கள் கி.பி 1948 இல் இலங்கை சுதந்திரமடையும்வரை தமது ஆட்சியை நிலை நிறுத்தினர். இவர்களது ஆட்சிக் காலப் பகுதியில் மட்டக்களப்பு தேசம் என்பது தற்பொழுது உள்ள மட்டக்களப்பு, அம்பாறை என்னும் இரு மாவட்டங்களை உள்ளடக்கியதாக இருந்தது. வடக்கே வெருகலாற்றினையும், தெற்கே குமுக்கனாற்றினையும், கிழக்கே வங்காள விரிகுடாக் கடலினையும், மேற்கே ஊவா வெல்லஸ்ஸ மலைத்தொடர்களையும் எல்லைகளாகக் கொண்டிருந்தது.

மட்டக்களப்பில் மரபு வழியாக நிலவி வந்த சைவசமயமானது பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் பல்வேறு மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் கண்டது. ஒருபுறம் மரபு வழியான இந்துசமயத்தில் மீளுருவாக்கம் கிராமிய மட்டத்தில் ஏற்பட்டது. மறுபுறம் மேல்நாட்டுக் கல்வியின் பயனாகவும் பிற தேசத் தொடர்புகளின் காரணமாகவும் படித்த மத்தியதர வர்க்கத்தினரின் தோற்றம் உருவானது. ஆகம வழிபாட்டு முறை படிப்படியாக வளர்ச்சியடையத் தொடங்கியது. இக்காலப்பகுதியிற் படித்த இளைஞர்களும் சான்றோர்களும் இணைந்து சைவப் பாடசாலைகளை மட்டக்களப்புக் கிராமங்கள்தோறும் உருவாக்கினர். சமய நிறுவனங்கள் பல தோற்றம் பெற்று சைவ மறுமலர்ச்சிக்காக உழைத்தன. பல அறிஞர்களும், சமய ஞானிகளும் தோன்றி சைவசமய பிரசங்கங்கள், சொற்பொழிவுகளை நிகழ்த்தியதோடு நூல்கள் பலவற்றையும் எழுதி வெளியிட்டனர். சைவாலயங்கள் பல தோற்றம் பெற்றதுடன் புனருத்தாரண வேலைகளும் இடம்பெற்றன.

**சைவப் பாடசாலைகள்**

யாழ்ப்பாணப் பிரதேசத்தைப் போன்று மட்டக்களப்பிலும் நிறுவனமயப்பட்ட அமைப்பாக சைவப் பாடசாலைகள் தோற்றம்

பெறுவதற்கு முன்னரே திண்ணைப்பள்ளிகள் அமைக்கப்பட்டு கல்விப் போதனை இடம்பெற்றுள்ளது. இதனை உறுதிப்படுத்துவதாக அக்காலத்திற் பாடப்பட்ட "எண்ணைய்ச்சிந்து" விளங்குகின்றது (சித்திரலேகா, மௌ., 2004:02). மொழி, சமயம், அறம் சார்ந்த அடிப்படை விடயங்களே இக்கல்விமுறையிற் பின்பற்றப்பட்டுள்ளன. எனினும் அந்நியர் ஆட்சியில் இத் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் சுதந்திரம் இழந்தன. ஆட்சியாளர் அறியாமலே இப்பள்ளிக்கூடங்களை நடத்தும் நிலை இருந்தது. மேலும் காலத்தின் தேவைக்கேற்ப நவீன கல்வியைப் பெறவும், ஆங்கிலம் கற்கவும் கிறிஸ்தவ மிஷனரிப் பாடசாலைகளை நாடுவது அவசியமாயிற்று. 1814 ஆம் ஆண்டிலிருந்து மெதடிஸ்த திருச்சபைப் பாடசாலைகளும் 1854 ஆம் ஆண்டிலிருந்து கத்தோலிக்க திருச்சபைப் பாடசாலைகளும் மட்டக்களப்பு மாநிலம் எங்கும் தீவிரமாகத் தோன்றத் தொடங்கின. இப்பாடசாலையிற் கல்வி பயில்வதாயின் சைவர்கள் கிறிஸ்தவ சமயத்திற்கு மதம் மாற வேண்டும் என்ற சூழ்நிலை உருவானது.

கிறிஸ்தவ பாதிரிமார்களது இக்கொள்கை படித்த சைவ இளைஞர்கள் மத்தியில் சமய வெறுப்புணர்ச்சியை உண்டுபண்ணியது. இதனால் சுதேச உணர்வுகொண்டு இளைஞர்கள் எழுச்சியுறும் நிலை தோன்றிற்று. சைவப் பிள்ளைகள் கல்வி கற்பதற்கென்று சைவப் பாடசாலைகள் கிராமங்கள் தோறும் அமைக்கப்படலாயின. இக்காலப்பகுதியிலே சுவாமி விவேகானந்தர் இலங்கையின் பல இடங்களிலும் நிகழ்த்திய சமயச் சொற் பொழிவுகளும் இப்பிரதேச மக்கள் மத்தியில் விழிப்புணர்வினை ஏற்படுத்தியது. இதன் பலனாக விவேகாநந்த சபை உருவாக்கப்பட்டு அதன் பரிபாலனத்தின் கீழும் பல சைவப்பாடசாலைகள் தோற்றம் பெற்றன.

இப்பகுதியில் வாழ்ந்த வசதி படைத்த சமய அபிமானிகள் இத்தகைய சைவப் பாடசாலைகளைஅமைப்பதற்குப்பெரிதும் உதவினர். தர்மரெத்தினம் உடையார், வேலுப்பிள்ளை உடையார், கா.வ.மார்க்கண்டன் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் இப்பாடசாலைகளை அமைப்பதற்காக நிலங்களை வழங்கியதுடன் பண உதவிகளையும் புரிந்துள்ளனர். சைவப்புலவர்களான வித்துவான் அ.சரவணமுத்தன், வித்துவான் வைத்திலிங்க தேசிகர், தேசிகமணி அருணாசலம் போன்றவர்கள் சைவப் பாடசாலைகளில் கல்வி போதித்தனர்.

சுவாமி விபுலாநந்தர் ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கப் பணிகளை ஆரம்பிப்பதற்காக கிழக்கு மாகாணத்திற்கு வருமுன்பே புளியந்தீவு (1902), ஆரப்பற்றை (1912), கல்லடி உப்போடை (1912), காரைதீவு (1912), மண்டூர் (1918), மொறக்கட்டாஞ்சேனை (1914) ஈச்சந்தீவு ஆகிய மட்டக்களப்புக் கிராமங்களில் மக்களின் முயற்சியால் சைவப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. (சிவசுப்ரமணியம், வ., 1993:72-73) மட்டக்களப்பிற்கு வருகைதந்த இராமகிருஷ்ண மிஷன் துறவிகள் இங்குள்ள சைவப் பாட சாலைகளுக்கு விஜயம் செய்ததுடன் தங்களது கருத்துக்களைப் பதிவுசெய்தும் வைத்துள்ளனர். 1918 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில்சுவாமிசர்வானந்தர்மட்டக்களப்பிற்கு வந்து இங்கு உற்சாகத்துடனும் அதேசமயத்தில் பல இன்னல்களுக்கிடையிற் சமயப் பணி புரிந்துவந்த பாடசாலைகளையும் பொது மக்களையும் சந்தித்தார். ஆரப்பற்றைச் சைவப் பாடசாலையைப் பார்வையிட்ட பின் அப்பாடசாலை சம்பவக் குறிப்புப் புத்தகத்தில் பின்வருமாறு எழுதினார்

"இக்கிராமத்தில் அமைந்துள்ள கல்விச்சாலையைப் பார்வையிட்டு மிக மகிழ்ந்தேன். இதனை அமைத்துப் பாது காப்பதில் இக்கிராம மக்கள் காட்டிய தீரம்மிக்க விடாமுயற்சியின் வரலாற்றினை நான் கேள்வியுற்றேன். இப்பாடசாலை மேலும் மேலும் வளர்ந்து சிறந்ததொரு கல்விச் சாலையாக அமைய பகவானின் ஆசி கிட்டுவதாக." (மேலது:72)

இவ்வாறு பல விதங்களிலும் சிறப்புற்றிருந்த கிழக்கிலங்கை மக்கள் தோற்றுவித்த பாடசாலைகள் ஏனைய மதஸ்தாபனங்களின் போட்டியை எதிர்த்து நிற்கவேண்டியிருந்தது. அதன் நிருவாகிகள் தங்கள் சொந்தத் தொழிலைக் கவனிக்கவேண்டியிருந்ததால் பாடசாலைகளின் வளர்ச்சிக்கு தமது முழுநேரப் பணியையும் செய்ய முடியவில்லை. போதுமான சிறந்த ஆசிரியர்கள் இல்லாமையும் ஒரு குறையாக இருந்தது. நிதி நிலைமையும் திருப்திகரமாக இல்லை. பாடசாலை நிருவாகம் திணறிக் கொண்டிருந்த நிலையில்தான் சுவாமி விபுலாநந்தர் வந்தார். கிழக்கின் மக்கள் பாடசாலைகளை அடிகளார்மூலம் ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்திடம் ஒப்படைத்து விடுவதே சிறந்த வழி என்ற முடிவுக்கு வந்தனர்.

சுவாமி விபுலாநந்தர் இப்பாடசாலைகளை பொறுப்பேற்றதிலிருந்து மேலும் பல சைவப் பாடசாலைகள் உருவாக்கப்பட்டன. “சைவப் பிள்ளைகள் சைவப் பாடசாலையிற் கல்வி பயில வேண்டும்” என்பதே அடிகளாரின் எண்ணமாயிருந்தது. இவ்வாறு அமைக்கப்பட்ட பாடசாலைகளில் கல்லடி உப்போடையில் உள்ள சிவாநந்த வித்தியாலயம் (1929) முக்கியமானது. இதுவே மட்டக்களப்பில் சைவமரபிலே தோன்றிய முதலாவது ஆங்கிலப் பாடசாலையாகும். இராமகிருஷ்ண மிஷன் மூலம் பெண்களுக்காக காரைதீவில் சாரதா வித்தியாலயமும்(1928) கல்லடியில் விவேகாநந்த வித்தியாலயமும் (1937) அமைக்கப்பட்டன. தொடர்ந்துகொக்கட்டிச் சோலை (1937), பழுகாமம் (1940), கழுதாவளை (1943), அக்கரைப்பற்று (1944) சித்தாண்டி (1945) போன்ற இடங்களிலும் பாட சாலைகள் உருவாக்கப்பட்டன.

அரசாங்கம் 1960 டிசம்பரில் பாட சாலைகளை பொறுப்பேற்றபோது மிஷன் பராமரிப்பில் இருந்த 26 பாடசாலைகளும் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டன. அப்பொழுது அப்பாடசாலைகளில் 9069 மாணவர்கள் கல்வி பயின்று கொண்டிருந்தனர். 317 ஆசிரியர்கள் சேவையில் அமர்ந்திருந்தனர் (பவள விழா மலர், 2001:26).

### சைவ சமய நிறுவனங்கள்

மட்டக்களப்பை ஐரோப்பியர் என்று கைப்பற்றினார்களோ அன்றே இங்கு சுதேச இயக்கங்கள் தோற்றம்பெறத் தொடங்கின (மகேஸ்வரலிங்கம், க., 2008:208) “நமது பிள்ளைகள் இருக்கவேண்டிய இடத்தில் இருக்கவேண்டும் என்பதுதான் அந்த இயக்கத்தின் நோக்கம். சுவாமி விவேகாநந்தரின் அமெரிக்க சிஷ்யைகளுள் ஒருவரான சகோதரி அவபாமியா அம்மையார் மட்டக்களப்பிற்கு விஜயம் செய்து கிராமங்கள்தோறும் இந்து சமய பிரச்சாரம் செய்தமையால் நாடெங்கிலும் ஓர் எழுச்சி உண்டாயிற்று. இந்த எழுச்சியின் பயனாகவே தான் மேற்குறிப்பிட்ட பேரியக்கம் தோன்றியது” என இளம் வயதிலே இதில் பங்காளராயிருந்த புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் குறிப்பிட்டுள்ளார் (பெரிய தம்பிப்பிள்ளை, ஏ., 1982: 27).

யாழ்ப்பாணத்திற்கும் மட்டக்களப்பிற்கும் இடையே ஏற்பட்ட உறவும் இவ்வியக்கத்தின் தோற்றத்திற்கு ஒரு உந்துசக்தியாக அமைந்தது. 1880 ஆம் ஆண்டிற்குப்பின் ஆறுமுகநாவலர் அவர்களின் வாரிசுகள் மட்டக்களப்பை நாடி வரலாயினர். இதனால் 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் யாழ்ப்பாண மக்கள் மத்தியிற் தோன்றிய சைவத் தமிழ் எழுச்சி இந்நூற்றாண்டின் பிற்பகுதியில் மட்டக்களப்பில் பரவத் தொடங்கி இச்சுதேச இயக்கங்களின் தோற்றத்திற்கும் காரணமாகியது. இவ்வியக்கத்திலே முதலியார் கா.வ. மார்க்கண்டன், குருநாதபிள்ளை கனகசபை, வித்துவான் ச. பூபாலபிள்ளை, பண்டிதர் சாமிநாத மயில்வாகனனார், வித்துவான் அ.சரவணமுத்தன், தேசிகமணி அருணாசலம், வித்துவான் வைத்திலிங்க தேசிகர், பொ.ஆறுமுகசாமி போன்றோருடன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெரியோர்

பலரும் பங்காளர்களாய் இருந்தனர். இப்புலவர்களது பணிகள் சைவசமயத் தினதும் சங்கங்களினதும் வளர்ச்சிக்குப் பெரும் துணை நின்றன.

சுவாமி விவேகாநந்தரது இலங்கை விஜயத்தை தொடர்ந்து பல பாகங்களிலும் விவேகாநந்த சபைகள் தோற்றம் பெற்றன போல் மட்டக்களப்பிலும் "விவேகாநந்த சபை" யொன்று உருவாக்கப்பட்டிருந்தது. எனினும் அதன் முழுமையான செயற்பாடுகள் பற்றி அறிய முடியவில்லை. **1915-01-21** இல் வெளியான இந்து சாதனம் இதழில் விவேகாநந்தரது ஜனனதினக் கொண்டாட்டத்தை இச்சபை சிறப்பாகக் கொண்டாடியதாக குறிப்பிடப்பட்டுள்ளது(மணி, பெ. சு., **1997:203-204**).

இராமகிருஷ்ண மிஷன் வருகைக்கு முன்பே பல சைவப் பாடசாலைகள் இச்சபையின் கீழ் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. இதேபோன்று **1926** காலப்பகுதியளவில் கல்லடி உப்போடையில் "ஸ்ரீ கணேசானந்த சபை" என்ற பெயரில் ஒரு சங்கமும் நிறுவப்பட்டிருந்தமை பற்றி அறிய முடிகின்றது. சைவசமய விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் பல இடங்களிலும் சமயச் சொற்பொழிவுகளை ஏற்பாடு செய்து நடாத்தியமை பற்றி இந்து சாதனம் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது (சிவசுப்ரமணியம், வ., **1993:67**). அருணாசல தேசிகர், புளியந்தீவு ஆ.தட்சணாமூர்த்தி, சுவாமி விபுலாநந்தர் போன்றோர் இதில் சொற்பொழிவுகளை நிகழ்த்தியுள்ளனர். ஆனைப்பந்தி இராமகிருஷ்ண மிஷன் ஆண்கள் பாடசாலையிற் தங்கியிருந்து சமயத் தொண்டாற்றி வந்த ஸ்ரீமத் அபிநாஷாநந்தாஜி அவர்கள், ஆனைப்பந்தி ஸ்ரீ சித்தி விக்னேஸ்வரர் ஆலயத்திற்கு வரும் சில பெண்களை அழைத்து, "சைவ மங்கையர் கழகம்" என்ற பெயரில் **1929**ஆம் ஆண்டு ஒரு சங்கத்தை அமைத்தார் (மனோஹரி, சீ., **2007:475**).

திருமதி ஆறுமுகம் என்பார் தலைமையில் உருவான அந்தக் கழகம் **1936** ஆம் ஆண்டுவரை இப்பாடசாலையிலே தேவாரம், புராணம் முதலியன படித்தலை முக்கிய குறிக்கோளாகக் கொண்டிருந்தது. பின், படிப்படியாக சமயத் தொண்டு மட்டுமல்லாது சமூக, கலை, கலாசாரப் பணிகளிலும் ஆர்வம் காட்டியது. ஞாயிறு சமய பாட சாலை, சங்கீத, நாட்டிய வகுப்புகள், கைப்பணி வகுப்புகள் என்பன பாடசாலை மாணவர்களுக்கு மட்டுமல்லாது, வளர்ந்த பெண்களுக்குமாக நடாத்தப்பட்டதாக அறிய முடிகின்றது. **1945** ஆம் ஆண்டு, ஆவணி ஓணம் திருநாளில் மனோன்மணி அம்பாள் சிலை ஒன்று மன்றத்தினரால் ஆனைப்பந்தி ஸ்ரீ சித்தி விக்னேஷ்வரர் ஆலயத்திற்கு வழங்கப்பட்டதென்றும், இந்தியாவிலிருந்து வருகை தந்த குன்றக்குடி அடிகளார் அவ்வைபவத்திற் கலந்துகொண்டு, மன்றத்தினருக்கு ஆசி வழங்கி "இந்து மகளிர் மன்றம்" என்ற புதிய நாமத்தினையும் சூட்டினாரென்றும் அறிய முடிகின்றது. தொடர்ந்து வளர்ச்சியடைந்த இம்மன்றம் ஆனைப்பந்தி கோயில் வளாகத்திலேயே ஒரு மண்டபத்தினை அமைத்து அதில் பாலர் பாடசாலை ஒன்றினையும், நெசவு நிலையம் ஒன்றினையும் தொடங்கி நடாத்தியது. சைவப் புலவர் அருணாசல தேசிகர் இயற்றிய "இந்துசமய மாத மகத்துவ மான்மியம்", "விநாயக மகத்துவ நுட்பமும் புளிய நகர் ஸ்ரீ சித்தி விக்னேஸ்வர ஆலய மான்மியமும்" ஆகிய இரு நூல்களையும் இம்மன்றமே வெளியிட்டு வைத்தது.

பண்டிதர் செ.பூபாலப்பிள்ளை கத்தோலிக்கப் பாடசாலைகளில் ஆசிரியராக இருந்த பொழுதிலும் சைவப் பணியில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். "அருள் நெறி திருக்கூடம்" என்ற பெயரில் வாலிபர்களைத் திரட்டி சைவப்பணி புரிந்து வந்தார் (சிவசுப்ரமணியம், வ., **1993:60**). இத்திருக் கூட்டத்தினர் பல தல யாத்திரைகளையும், கூட்டங்களையும் நடாத்திச் சைவமக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினர்.

தென்னிந்தியா திண்டுக்கல்லில் இருந்து தொழிற்பட்டு வந்த சுவாமிஜி சோமேஸ்வரானந்த கிரி அவர்களின் உபதேசங்களால் கவரப்பட்டு "செட்டிபாளையம் திருவருள் சங்கம்", "குருக்கள் மடம் திருவருள் சங்கம்" எனும் இரண்டு சங்கங்களும் 1940 இல் உருவாக்கப்பட்டன (மௌனகுரு,சி.(பதி.), 2003:184). இந்து விழாக்கள், பாடசாலை மாணவர்களுக்கான தேவார பண்ணிசைப் போட்டிகள், பண்ணிசை வகுப்புக்கள், குருபூசை விழாக்கள் முதலியவற்றை இச் சங்கங்கள் சிறப்பாக நடாத்தின.

இதனைத் தொடர்ந்து 1945 இல் மட்டக்களப்பு கோட்டை முனையில் "சைவ மகாசபை" நிறுவப்பட்டது (பாக்கியமூர்த்தி, ஏ., நேர்காணல்). திரு.க.ஏரம்பமூர்த்தி, நாகமணி பண்டிதர் போன்றோரால் உருவாக்கப்பட்ட இச்சபை "சைவப்பாட வகுப்பு, கூட்டுப் பிரார்த்தனை, சமயச் சொற்பொழிவுகள் என்பவற்றை நடாத்தியது. கோட்டைமுனை ஸ்ரீமகா மாரியம்மன் ஆலயம், வீரகத்திப் பிள்ளையார் ஆலயம், பெரியதம்பிரான் ஆலயம், நரசிங்க வைரவர் ஆலயம் ஆகிய ஆலயங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் இதில் அங்கம் வகித்ததாக அறியப்படுகின்றது.

சமூகத் தொண்டராக விளங்கிய க.நடராஜன், வீ.சி.கந்தையா, திரு.வெ. திருநாவுக்கரசு முதலியோர் சேர்ந்து நிறுவிய "திருத்தொண்டர் கழகம்" சில காலம் மட்டக்களப்பிற் சிறந்த சைவப்பணியாற்றியது (சிவசுப்ரமணியம், வ., 1993:62). மேற்குறித்த நிறுவனங்களோடு பிரித்தானியராட்சியின் இறுதிக் காலப் பகுதியிற் கிராமங்கள் தோறும் இந்து இளைஞர் மன்றம் என்ற பெயரோடு பல நிறுவனங்கள் தோன்றிச் சைவப் பணி புரிந்துள்ளன. சைவசமயப் பிரச்சாரம், அறநெறிக் கல்வி, சமய தினங்களைக் கொண்டாடுதல் முதலியன இவற்றின் பணிகளாயிருந்தன.

**சமயப் பிரசங்கங்களும் சொற்பொழிவுகளும்**

ஆறுமுக நாவலர் தான் வாழ்ந்த காலத்தில் யாழ்ப்பாணத்திற் சைவ சமயத்தை நிலைநிறுத்த பிரச்சாரங்களே பேருதவி செய்யத்தக்கன என நம்பி அதன்படி செயற்பட்டார். அதே போன்றே மட்டக் களப்பிலும் சமயப் பெரியார்களிற் சிலர் இத்தகைய வழிமுறையினைக் கையாண்டு சமயம் வளர்க்கப் பாடுபட்டுள்ளனர்.

இவர்களுள் முதன்மையானவராகத் திகழ்பவர் சைவப்புலவர் சா.அருணாசல தேசிகரவர்கள். தனது 15 ஆவது வயதிலிருந்து சொற்பொழிவாற்றத் தொடங்கிய இவர் தனது இறுதிக் காலம் வரையும் தொடர்ந்து இப்பணியைச் செய்து வந்தார். கிறிஸ்தவ மதமாற்றத்தைத் தடுக்கும் நோக்கோடு பல கிராமங்களுக்குஞ் சென்று சைவப் பிரசாரஞ் செய்தார். மட்டக்களப்பில் அவரது சொற்பொழிவு நடைபெறாத கோயில்கள் இல்லையென்றே கூறலாம். எந்தப் பொருளை எடுத்துக்கொண்டாலும் அதில் ஆழ்ந்து பேசுகின்ற தன்மை இவரிடம் இயல்பாகவே இருந்தது. ஒரு சைவ சமயத்தவன் தன் அக வாழ்விலும் புற வாழ்விலும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதையே இவரது சொற்பொழிவுகள் புலப்படுத்தி நின்றன. ஆகம வழிபாட்டிற்கு முதன்மையளித்துப் பேசுபவராக இவர் விளங்கினார். ஆனைப்பந்தி ஸ்ரீ சித்தி விக்னேஸ்வரர் ஆலயத்தில் வெள்ளிக் கிழமைதோறும் சமயப் பிரசங்கம் செய்து வந்த இவர் இதற்கென ஒரு மாணவர் கூட்டத்தையே உருவாக்கிவிட்டார். திரு.சீ.நாகையா ஆசிரியர், திரு.வ.சித்திவிநாயகம், பண்டிதர் த.கிருஷ்ணபிள்ளை ஆகியோர் தொடர்ந்தும் அவருடைய பணியினை முன்னெடுத்துச் சென்றவர்களாவர்.

அடுத்து, தனது சொற்பொழிவுகளின் மூலம் பிறமத கண்டனங்களை வெளிப்படுத்திச் சைவசமய மேன்மையை எடுத்து விளக்கியவர்களில் வித்துவான் பு. வைத்திலிங்க தேசிகர் முக்கியமானவர்.

இவரது பேச்சினைக் குறித்து மட்டக்களப்புத் தமிழக ஆசிரியர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். 'மட்டக்களப்புத் தமிழகத்துச் சைவசமயப் புரட்சி வீரர்களின் வரிசையில், முன்னணியிலே நின்று, சைவம் மறுத்த வல்லாளர்களுக்கெதிரான மத கண்டனங்களை மாரிபோலப் பேச்சினாலும், எழுத்தினாலும் சொரிந்து வந்தவராகையால் தேசிகரென்றாலே பிற மதத்தினரெல்லாரும் நடுங்கியகலுவது வழக்கமாயிற்று. இவரது சொற்பொழிவுகள் சித்தாந்த தத்துவங்கள் கலந்த தமிழ் மழையாகப் பொழிந்தன. தீபம் பத்திராசிரியராக இருந்த வேதநாயகம் பாதிரியாருடன் மாறுகொண்டெழுதிய கண்டனங்களைச் "சுதேச நாட்டிய" இதழ்களிற் கண்டு புகழாதவரில்லை யெனலாம்" (கந்தையா, சீ., 2002:244).

சமயச் சொற்பொழிவுகளின் மூலம் மக்கள் மனதில் இடம்பிடித்தவர்களில் வித்துவான் அ.சரவணமுத்தனும் ஒருவராவார். ஒல்லாந்தரது ஆட்சியைத் தொடர்ந்து இலங்கையிலே நிலைபெற்ற புறச்சமயப் பிரிவுகள் மட்டக்களப்பிலும் மெல்லப் பரவி மக்களுடைய தமிழ்ப் பண்பினையும், ஒழுகலாற்றினையும் மாற்றி வரும் போது அந்நிலையை மாற்றி அனைவருக்கும் நல்லறிவு புகட்டிச் "சைவசமய இயக்கம்" என்ற பிரச்சார இயக்கத்தின் பேராற் தமிழ் மானங்காத்த ஒரு மட்டக்களப்பு நாவலர் நம் சரவணமுத்துச் சாமியார் என்று வி.சீ.கந்தையா இவரைச் சிறப்பிக்கின்றார் (மேலது:214). சிலேடை நயம் பொதிந்த இவரது சொற்சுவையினால், சொற்பொழிவுகளிலும், கண்டன உரைகளிலும் இவருக்கு எங்கும் பெரும் சிறப்புக் கிடைத்து வந்தது. தமிழ் நூல்களோடு, கிறிஸ்தவ வேதங்களையும் நன்கு கற்று, ஆங்கில மொழியிலும் சொல்லாற்றல் படைத்திருந்த வித்துவானுடைய பேச்சினை எதிர்த்து வெல்லமுடியாது பாதிரிமார் பலர் திணறினார்கள். அருணாசல தேசிகருடைய நட்பும் இவருக்கு கிடைத்தமையால் அவரையும் உடன் கொண்டு இடந்தோறும் சென்று சொன்மாரி செய்து சைவம் வளர்க்கும் பணியிலே அளப்பரிய வெற்றி கண்டார். இவரது பேச்சாற்றலால் கவரப்பட்டு பல இளைஞர் படையினர் இவருடன் இணைந்து பிரச்சாரங்களில் ஈடுபட்டனர்.

சுவாமி விபுலாநந்தரும் மேலே நாம் குறிப்பிட்ட அருணாசல தேசிகர், வித்துவான் சரவணமுத்தன் ஆகியோருடன் சேர்ந்து சைவசமய சொற்பொழிவுகளிலும் ஈடுபட்டுள்ளார். இவர்கள் மூவரும் இளமைக் காலம் முதல் நண்பர்களாய் இருந்தவர்கள். ஆலயங்கள் தோறும் சமயப்பிரசங்கம் செய்தவர்கள். 1928 ஆம் ஆண்டு மட்டக்களப்புக் கல்லடி ஸ்ரீ விநாயகராலயத்தில் 'சுசைவசமயம்சுசு எனும் தலைப்பில் விபுலாநந்த அடிகளார் நிகழ்த்திய சொற்பொழிவு குறித்து இந்துசாதனம் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது (சிவசுப்ரமணியம், வ., 1993:68).

## சைவ இலக்கியங்கள்

பிரித்தானியராட்சியில் சமய சுதந்திரம் வழங்கப் பட்டமையினால், சைவப்பெரியார்களிற் பலர் தமது சமய உண்மைகளை மக்களுக்கு எடுத்துவிளக்கும் நோக்கில் இலக்கியங்களை எழுதுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டது. அத்தகையோரில் சைவப் புலவர் சா. அருணாசலதேசிகர் (1888-1969) அன்னியரின் ஆட்சியினால் தமது சமய அடிப்படைகளையே மறந்திருந்த சைவ மக்களுக்கு அவற்றை விளக்கவேண்டிய தேவையை உணர்ந்த தேசிகர் அவர்கள் வடக்கில் ஆறுமுக நாவலர் எவ்வாறு சமய உண்மைகளை எடுத்தியம்பி இலக்கியங்களைப் படைத்தாரோ அதே போன்றே இவரும் சிறுவர்கள் முதல் பெரியோர்கள் வரை கற்றுப் பயனடையக் கூடிய வகையில் சைவ சமயத்தின் பல துறைகளையும் விளக்கும் "சைவக் களஞ்சியம்" என்ற நூலை பாகம் பாகமாக எழுதத் தொடங்கினார். எல்லாமாக 12 தொகுதிகள் இவரால் எழுதப்பட்டன. இந்நூற் 12

பாகங்களும் சைவ சமயத்தை புரணமாய் அறியச் செய்யவல்லனவாகும். "நமது நூல்கள் சைவ சமயத்தைத் தெளிவாய் அறியவைப்பன மாத்திரமல்ல, பகிரங்க சைவப் பிரசங்கி ஆக்கவும் வல்லன" (அருணாசல ஆசிரியர், கா., 1968. முன்னுரை) என்பது அவருடைய கருத்தாகும். அக்கால நிதி நிலைமையின் காரணமாகப் போலும் 8 தொகுதிகளை மாத்திரமே அவரால் அச்சு வாகனமேற்ற முடிந்தது.

இவற்றுள் முதற்பாகம் "சைவசமய ஆரம்பபோதினி" இரண்டாம் பாகம் "சைவசமய இளைஞர் போதினி" மூன்றாம் பாகம் "இந்து மாணவர் பக்திப் பாடற் பாமணிமாலை" நான்காம் பாகம் "இந்து சமய மாத மகத்துவ மான்மியம்" ஐந்தாம் பாகம் "சைவ இலக்கிய கதாமஞ்சரி" ஆறாம் பாகம் "சைவசமய சிந்தாமணி" பத்தாம் பாகம் "அருட்பாத் திரட்டும் அரும்பொருட்பாக்களும்" பதினொராம் பாகம் "விநாயக மகத்துவ நுட்பமும் புளியநகர் ஸ்ரீ சித்திவிக்னேஸ்வர ஆலய மான்மியமும்" என்பன அச்சில் வெளிவந்துள்ளன. முறையே ஏழாம், எட்டாம், ஒன்பதாம், பன்னிரெண்டாம் பாகங்களாகிய "சித்தாந்த சிரோமணி" "மெய்ஞ்ஞான தீபம்" "சர்வஞானோத்தராகம சாரசங்கிரகம்" "முருகன் மகத்துவ நுட்பம்" என்பன வெளிவரவில்லை (சிவ சுப்ரமணியம், வ., 1993:57).

சைவக் களஞ்சியம் நூற் தொகுதியில் எல்லோராலும் விதந்து பாராட்டப்பட்ட நூல் "சைவ சமய சிந்தாமணி" ஆகும். சாதாரண மக்கள் முதல் உயர் வகுப்பில் உள்ளவர்களும், சைவசித்தாந்த துறையில் பயில்வோரும் கற்றுப் பயனடையக் கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ள இந்நூலை சைவசமயக் கருவூலமாகக் கருதலாம். 18 இயல்களை உடைய இந்நூலில் சைவ சித்தாந்த தத்துவங்களையும், சைவக் கிரியை முறைகளையும் எல்லோரும் இலகுவில் விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் எளிய தமிழில் ஆசிரியர் எழுதியுள்ளார். சைவ சமயத்தை சுருக்கமாக அறிய விரும்புபவர்களுக்குத் தலைசிறந்த நூல் இதுவாகும். இந்நூல் 1960 ஆம் ஆண்டே மட்டக்களப்பு தமிழ்க் கலை மன்றத்தினால் அச்சில் வெளியிடப்பட்டது. இதன் தேவை கருதி 1993 இல் மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம் இதனை மீள்பதிப்புச் செய்தது. தற்பொழுது இந்நூற் பிரதியினை பெற முடியாதுள்ளது. மீண்டும் இதனை மீள்பதிப்புச் செய்ய வேண்டியது காலத்தின் தேவையாகும்.

யாழ்ப்பாணத்துப் பேரறிஞர்களாலும், இந்தியத் தமிழகத்தாராலும் ஒருங்கே போற்றப்பட்ட பெருமைக்குரியவரான வித்துவான் ச. பூபாலபிள்ளையவர்களும் இக்காலத்தே சமய இலக்கியங்கள் பலவற்றையும் எழுதியுள்ளார். இவர் 1882-1921 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் இயற்றிய பத்துப் பிரபந்தங்கள் அடங்கிய தொகுதியை "தோத்திரக்கோவை" முதற்பாகம் என்ற பெயரில் திருமயிலாப்பூர் சே.வே. ஜம்புலிங்கம்பிள்ளையவர்கள் 1923 ஆம் ஆண்டில் சென்னையில் அச்சிட்டு வெளியிட்டார் (வாமன், நா., 2010:45). பெரியதுறைத் திருமுருகர் பதிகம்(1882) மட்டக்களப்பு புளியநகர் ஆனைப்பந்திச் சித்திவிக்னேஸ்வரர் பதிகம் (1905), சிவ தோத்திரம் (1906), கணேசர் கலிவெண்பா (1922), யாழ்ப்பாணத்து அரசடி விநாயகர் அகவல் (1920), சிவமாலை (1921), கண்டிநகர் கதிரேசர் பதிகம், மட்டுநகர் கொத்துக்குளத்து மகாமாரியம்மன் அந்தாதி (1922), நல்லிசை நாற்பது, கண்டிநகர் செல்வ விநாயகர் பதிகம் என்பனவே அந்நூல்களாகும்.

மேற்குறித்த பிரபந்தங்களோடு இவர் இயற்றிய சமயப் பெருநூல்களாக சீமந்தனி புராணம், விநாயக மான்மியம் என்பன குறிப்பிடப்படுகின்றன. இதில் "சீமந்தனி புராணம்" (1894) வல்வை இயற்றமிழ்ப்

போதகாசிரியர் ச. வயித்திலிங்கபிள்ளையவர்களால் பரிசோதிக்கப்பட்டு சென்னை ஸ்ரீ பத்மநாபவிலாச அச்சுக்கூடத்திற் பதிப்பித்து வெளியிடப்பட்டது. இது பத்துச் சருக்கங்களையும் 800 விருத்தப் பாடல்களையும் உடையது. சோமவார விரத மகிமையை மக்களுக்கு விளக்கமாக எடுத்துக்கூறுதலே இந்நூலை ஆசிரியர் இயற்றியதன் பிரதான நோக்கமாகும். "விநாயக மான்மியம்" (1907) என்னும் இலக்கிய வடிவம் புராணக் கதையம் சங்களையும், விநாயகரது திரு அவதாரங்களையும் எடுத்துரைக்கின்றது. வித்துவான் ஸ்ரீ. கலியாண சுந்தர முதலியார், சுன்னாகம் அ. குமார சுவாமிப்புலவர் போன்றோர் இந்நூலுக்குச் சிறப்புப் பாயிரம் அமைத்துச் சிறப்பித்துள்ளனர்.

"முப்பொருளாராய்ச்சி" என்ற தலைப்பில் அமைந்த இவரது கட்டுரை மதுரை தமிழ்ச்சங்க வெளியீடாகிய "செந்தமிழ்" பத்திரிகையில் வெளியானது. பின் இது நூல் வடிவமாக்கப் பெற்றதாகவும் அறியப்படுகிறது. தமிழ் வரலாறு நூன்முகத்தில் "முப்பொருளியல் தேறக்கற்கு முறைமையை "முப்பொருளாராய்ச்சி" என்னும் நூலில் விரித்திரிக்கின்றாம். ஆண்டு கண்டு தெளிக" (மேலது:45) என இவர் குறிப்பிடுவதிலிருந்து இது தெரிய வருகிறது. சைவசித்தாந்த தத்துவத்திலும் ஆசிரியருக்கிருந்த புலமையை இது வெளிக்காட்டுகிறது எனலாம்.

மட்டக்களப்பு தாண்டவன் வெளியைச் சேர்ந்த வித்துவான் அ.சரவணமுத்தன் அவர்கள் 1915 இல் பாடிய "மாமாங்கப் பிள்ளையார் பதிகத்தின் சிறப்பினை அறிந்து மதுரை தமிழ்ச் சங்கம் இவரை அங்கத்தவராக இணைத்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. இவர் இயற்றிய "கதிர்காம வேலவர் தோத்திர மஞ்சரி" (1927) என்ற நூலுக்கு சுவாமி விபுலாநந்தர் சிறப்புப் பாயிரம் அளித்துச் சிறப்பித்துள்ளார். சனீஸ்வரனைத் துதிக்கும் இவரது "சனி வெண்பா" (1927) முப்பது வெண்பாக்களாலான நூலாகும்.

சுவாமி விபுலாநந்தரின் இளமைக் கால ஆசிரியர்களில் ஒருவராக விளங்கிய வித்துவான் பொ.வைத்திலிங்க தேசிகர், "பாலையடி வால விக்னேஸ்வரூஞ்சல்" "மண்டூர் கந்தசுவாமி லீலா சங்கரமானவரூஞ்சல்" ஆகிய இரு நூல்களைப் பாடியளித்துள்ளார். 1916 இல் பருத்தித் துறை கலாநிதி யந்திர சாலையில் இவை அச்சிட்டு வெளியிடப்பட்டன. இவற்றுடன் பழமை மிகுந்த ஸ்ரீதட்சிணகைலாச புராணம் (1916) கோணேசர் கல்வெட்டு (1916) பிள்ளையார் கதை (1904) ஆகிய நூல்களை பதிப்பித்தும் வெளியிட்டுள்ளார்.

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் 1922 ம் ஆண்டு மண்டூர் முருகன் ஆலயத்தின் பெயரில் பாடியளித்த "மண்டூர்ப்பதிகம்" என்ற அவரது முதல் நூல் அறிஞர் பலருடைய நன்மதிப்பையும் பெற்றது. இந்நூலிற்குச் சுவாமி விபுலாநந்தர்,

> **"..மண்டூரில் உறைமுருகன் மலரடிக்கோர் திருப்பதிகம்**
> **மரபிற் சொற்றான்**
> **கண்டூருமினியமொழிப் பெரியதம்பிப்பிள்ளையெனும்**
> **கலைவல்லோனே"**
> **(பெரியதம்பிப்பிள்ளை, ஏ., 1982:45)**

எனும் விருத்தப்பா ஒன்றினாலமைந்த சிறப்புரையினை வழங்கிச் சிறப்பித்துள்ளார். வடமொழியிலமைந்த பகவத்கீதையைப் படித்து அவற்றைத் தமிழில் 700 வெண்பாக்களாக எழுதி "பகவத்கீதை வெண்பா" என்ற நூலாக 1943 இல் படைத்தளித்தார். "வெண்பாவிற் பெரியதம்பி" என்று அறிஞர்கள் போற்றும் வகையில் இந்நூல் அமைந்ததென்பர்.

சுவாமி விபுலாநந்த அடிகளார் தன்னுடைய இளமைக் காலத்தில் (1915) நான்கு பாடல் நூல்களை எழுதியளித்துள்ளார். கணேச தோத்திர பஞ்சகம், கதிரையம்பதி மாணிக்கப்பிள்ளையார் இரட்டைமணிமாலை, சுப்பிரமணிய சுவாமிகள் இரட்டைமணிமாலை, குமரவேள் நவமணிமாலை எனும் நூல்களை யாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டை க.சிதம்பரநாத பிள்ளையவர்கள், வித்துவான் சரவணமுத்தனது சிறப்புரையுடன் பதிப்பித்து வெளியிட்டார். அவற்றுடன்

சிவனது பஞ்சகிருத்தியத் தத்துவத்தினை வெளிப்படுத்தும் நடராசர் வடிவம் என்ற ஒரு நூலையும் அடிகளார் இயற்றியுள்ளார். மேற்குறித்த நூல்களுடன் மட்டக்களப்பின் மரபுவழித் தமிழறிஞர்கள் பலரும் பாடியளித்த அம்மானை, காவியம், பதிகம், அகவல் எனும் வடிவிலமைந்த சிறு பிரபந்தங்கள் பலவும் இக்காலத்தில் எழுந்துள்ளன. இவற்றுள் பெரும்பாலானவை கிராமங்கள் தோறும் அமைந்துள்ள ஆலயங்களைக் குறித்துப் பாடப்பட்டவையாக உள்ளன. இவை அனைத்தும் அச்சில் வெளிவந்ததாகத் தெரியவில்லை. இக்காலத்துச் சைவ இலக்கியங்கள் குறித்து விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமான ஒன்றாகும். ஆய்வுப் பரப்பினை கருத்திற் கொண்டு இங்கு சுருக்கமாகவே ஆராயப்பட்டுள்ளது.

**சைவாலயங்களின் தோற்றமும் புனருத்தாரணமும்**

இலங்கையில் போர்த்துக்கேயராட்சிக் காலப் பகுதியில் சைவாலயங்களில் வழிபாடுகள் குன்றியிருந்ததோடு பல சைவாலயங்களும் அழித்தொழிக்கப்பட்டன என்பதை முன்பு குறிப்பிட்டோம். மட்டக் களப்பிலும் இதன் தாக்கம் இருந்துள்ளதை சிதைந்த கோயில்களின் எச்சங்கள் புலப்படுத்தி நிற்கின்றன. திருப்பெருந்துறை, நாதனையாற்றுப் (வெல்லாவெளி) பெருவெளிகள், கதிரவெளி போன்ற இடங்களில் இத்தகைய ஆலயங்களின் அழிபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டன (மௌனகுரு,சி.(பதி.), 2003:02). கிபி.1800 களைத் தொடர்ந்து போர்த்துக்கேய, ஒல்லாந்த கெடுபிடிகளும் கட்டுப்பாடுகளும் குறையத் தொடங்க சைவசமய மறுமலர்ச்சி வேரூன்றத் தொடங்கியது. இதன் பயனாக அழிக்கப்பட்ட சைவாலயங்கள் புனர்நிர்மாணம் செய்யப்பட்டதோடு புதிய பல ஆலயங்களும் தோற்றம்பெறத் தொடங்கின. குடிசைகளாக இருந்த ஆலயங்கள் பல கட்டட நிர்மாணம் பெற்றன. புராதன வரலாற்றுப் பெருமை மிக்க ஆலயங்களில் புனரமைப்பு வேலைகள் இடம்பெற்றுள்ளதையும் கண்டுகொள்ள முடிகின்றது.

இக்காலப் பகுதியில் கிராமிய மட்டத் திலான அபிவிருத்தி வேலைகள் துரிதமாக இடம்பெறத் தொடங்கின. ஊர்களை இணைக்கும் வீதிகள் அமைக்கப்பட்டதுடன், ஊர்கள் தோறும் விநாயகர் கோயில்களும் உருவாக்கப்பட்டன. 1900 ஆம் ஆண்டு காலப்பகுதியளவில் புயல், வெள்ளம் முதலியனவும் தொற்று நோய்களும் பரவத் தொடங்கின. இதனைத் தொடர்ந்து ஊர்முனைகளில் மாரி அம்மன் கோயில்கள் அமைக்கப்பட்டன. மேலும் மட்டக்களப்பு வழிபாட்டில் முக்கியம் பெறும் கண்ண கிக்கும் கிராமங்கள் தோறும் கோயில்கள் எழுப்பப்பட்டன.

மட்டக்களப்பில் தற்காலத்தே பிரசித்தி பெற்று விளங்கும் புன்னைச்சோலை ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலயம் (1910) ஏறாவூர் பத்திரகாளியம்மன் ஆலயம் (1820) நாவலடி ஸ்ரீ கடலாட்சி அம்மன் ஆலயம் (1940) மட்டக்களப்பு நரசிங்கசுவாமி கோயில் (1845) பழுகாமம் திரௌபதையம்மன் ஆலயம் என்பன இக்காலப் பகுதியிற் தோற்றம் பெற்ற ஆலயங்களுக்கான ஒரு சில எடுத்துக்காட்டுகளாகும்.

மட்டக்களப்பில் புகழ்பெற்ற ஆலயமாக விளங்கும் மாமாங்கப் பிள்ளையார் ஆலயம் மிகப் பழமையானதாக இருந்த பொழுதிலும் இக்காலப் பகுதியிலேயே (1880) இது நிலையான கற்கோயிலாக அமைக்கப்பட்டு கும்பாபிஷேகமும் செய்யப்பட்டது (கந்தையா, சீ., 1997:17) இதே போன்று உகந்தைமலை முருகன் கோயிலும் (1885) யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மார்க்கண்டு முதலாளி என்பவரால் கட்டட நிர்மாணம் பெற்றது, (மேலது - 34) இவற்றோடு கொக்கட்டிச் சோலைத் தான்தோன்றீஸ்வரர் கோயில், மண்டூர் முருகன் கோயில், திருக்கோயில் திருமுருகன் ஆலயம், சித்தாண்டி சித்திர வேலாயுத சுவாமி ஆலயம் முதலான வரலாற்றுப்

புகழ்பெற்ற ஆலயங்களும் புனரமைப்பு வேலைகள் இடம்பெற்றுப் புதுப்பொலிவடைந்தன.

## முடிவுரை

மட்டக்களப்பு வரலாற்றில் பிரித்தானியராட்சிக் காலப்பகுதியில் சமூகம், பொருளாதாரம், பண்பாடு ஆகிய துறைகளில் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டன. இக்காலத்தே அரசாங்க சமயமென்று கிறிஸ்தவம் பிரகடனப் படுத்தப்படாமையினால் எல்லோருக்கும் வழிபாட்டுச் சுதந்திரங்கள் கிடைத்தன. எனினும் இக்காலப்பகுதியில் இங்கு வந்த மிஷனரிகளினால் ஏற்படுத்தப்பட்ட கிறிஸ்தவ சமயப் பிரச்சாரம், ஆங்கிலக் கல்வி முறை, தொழில் வாய்ப்பின் நிமித்தம் மதம் மாற வேண்டிய சூழல் என்பன இங்கு வாழ்ந்த சைவர்களை சுதேச உணர்வு கொண்டு எழச் செய்தன. இதன் காரணமாக சைவ சமய நிறுவனங்களும் சைவப்பாடசாலைகளும் தோற்றம்பெற்றதுடன், சமயப்பெரியார்கள் பலர் தோன்றிச் சமயப் பிரசங்கங்களை நிகழ்த்தியும் சைவ இலக்கியங்களை படைத்தும் சைவ மறுமலர்ச்சியை ஏற்படுத்தினர். சைவாலயங்களும் புனர்நிர்மாணம் பெற்றன. இவற்றை வைத்து நோக்குகின்ற போது இலங்கையின் வடக்கே நாவலர் தலைமையில் உருவான சைவ மறுமலர்ச்சிக்குச் சமாந்தரமான போக்குகள் மட்டக்களப்பிலும் ஏற்பட்டுள்ளது என்பது கண்கூடு.

## உசாத்துணை நூல்கள்

1. சித்திரலேகா, மௌ., (2004), வாய்மொழி மரபுகள் வரலாற்று மூலங்களாக, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
2. சிவசுப்ரமணியம், வ., (1993), விபுலாநந்த தரிசனம், சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழாச் சபை, மட்டக்களப்பு.
3. இராமகிருஷ்ண மிஷன் மாணவர் இல்ல "பவள விழா" மலர், 2001, இராமகிருஷ்ண மிஷன், மட்டக்களப்பு.
4. மகேஸ்வரலிங்கம், க., (2008), மட்டக்களப்பு வாழ்வும் வழிபாடும், கொழும்புத் தமிழ்ச்சங்கம், கொழும்பு.
5. பெரியதம்பிப்பிள்ளை, ஏ., (1982), உள்ளதும் நல்லதும், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவுப்பணி மன்றம், மட்டக்களப்பு.
6. மணி, பெ. சு., (1997) இலங்கையில் இராமகிருஷ்ணர் இயக்கம், இராமகிருஷ்ண மிஷன், கொழும்பு.
7. மனோஹரி, சீ., (2007), இந்து ஒளி, அகில இலங்கை இந்துமாமன்றம், கொழும்பு.
8. மௌனகுரு, சி. (பதி.), (2003) மட்டக்களப்புத் தமிழகத்தில் இந்துப் பண்பாடு, இரண்டாம் உலக இந்து மாநாடு, மட்டக்களப்பு.
9. பாக்கியமூர்த்தி, ஏ., நேர்காணல், ஓய்வு பெற்ற அதிபர், வயது-74, தாமரைக்கேணி,
10. கந்தையா, சீ., (2002), மட்டக்களப்புத் தமிழகம், 2002, எக்ஸில், பிரான்ஸ்.
11. அருணாசல ஆசிரியர், கா., (1968), அருட்பாத்திரட்டும் அரும்பொருட் பாக்களும், மட்டக்களப்பு.
12. வாமன், நா., (2010), செங்கதிர், மட்டக்களப்பு.
13. கந்தையா, சீ., (1997), மட்டக்களப்புச் சைவக் கோயில்கள், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், இலங்கை.